# பசுவின் புலம்பல்

அருட் கவி. சீ விநாசித்தம்பிப்புலவர்



உ

சிவமயம்

# பசுவின் புலம்பல்

ஆக்கம்


**அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவர்**

தலைவர், இந்துசமயப்பேரவை



வெளியீடு:

இந்துசமயப் பேரவை யாழ்ப்பாணம்.

விஷுவருடப்பிறப்பு

14-04-2001

## சைவ மக்களுக்கு ஒரு வேண்டுகோள்

சைவ அன்பர்களே!

இடபத்தில சிவபெருமான் வருகிறார். பசு யாகத் திரவியங்களை வழங்குகிறது. இத்தகைய நெறியில் மிகுந்த நம்பிக்கையுடைய மெய்யுணர்வு படைத்த சைவ மக்கள் இன்னூலைப் படித்து, மாட்டைக் கொலை செய்து அதன் மாமிசத்தை உண்டு சைவ நெறி தவறும் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டுகிறோம்

### நன்றி

இந்நூலைத் தங்கள் சொந்தப் பொறுப்பாகக் கொண்டு சிறந்த முறையில் அச்சிட்டு எமக்கு இலவசமாக வழங்கிய நல்லூர் பிள்ளையார் அச்சகத்தாருக்கு இந்துசமயப் பேரவையின் மிக்க நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

சி.சக்திகிரிவன்
செயலாளர்
இந்துசமயப் பேரவை

உ

சிவமயம்

அரி ஓம் கோபாலாய நம:

# கோமாதா சிவகுலமாதா

நூல்

ஓமாம் அட்சரத் தோங்கிய வேதம்
பூமா ரிகொடு போற்றிடும் தெய்வம்
ஓமாக் கினிபுகழ் உயர்த்திடும் தெய்வம்
கோமா தாவைக் கும்பிட்டு வாழ்வாம்

அது ஒரு ஒதுக்குப்புறக்கிராமம், கமமும் கால்நடை வளர்ப்புமே அக்கிராம மக்களின் தொழில்கள். விளைநிலங்கள் வறுமையில்லா வாழ்வு தருவன, பசுக்கள், பாலும் பாலுணவுகளும் வழங்குகின்றன. எருதுகள் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. "வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்" என்று சூடிக் கொடுத்த நாச்சியாரின் பாடலுக்கேற்ப வேண்டிய படி பால் கொடுத்து - கோமாதா அவர்களின் குலமாதாவாக விளங்குகிறாள்.

*****

ஒருநாள அதிகாலையில் அக்கிராம மத்தியில் நாற்சக்கர இயந்திரவண்டி ஒன்று வந்து நின்றது. அதில் வந்த மூவர் வண்டியை விட்டு இறங்கினர். வாகனத்தைப் பார்ப்பதற்கு ஊர்மக்கள் திரண்டனர். வந்தவர்களைப்பார்த்து என்ன தேவை என்றனர். நாங்கள் மாடுகள் விலைக்கு வாங்கு பவர்கள் உங்களிடம் விற்கிற மாடுகள் உண்டா? என்றனர்.

சம்பாஷணை நடக்கிறது

"என்னையா உழவு மாடா பால் மாடா?
எங்களுக்கு இறைச்சிக்கடைக்கு மாடு வேண்டும்
ஐயா நாங்கள் மாடுகளைத் தெய்வங்களாகப் போற்றுகின்றோம். இறைச்சிக்கு மாடு விற்பதில்லை வந்தவழியே திரும்பிப்போங்கள்"

(அத்தருணம் வேறொருவன் ஓடி வருகின்றான்)

இந்த முட்டாளுடைய கதையை விடுங்கள் இங்கே பலர் மாடுவிற்பதற்காகக் காத்திருக கிறார்கள் நானே உங்களுக்குத் தேவையான மாடுகள் சேர்த்துத் தருகிறேன். நில்லுங்கள் என்றான்.

(மாடு விற்பதில்லை என்றவன் நெஞ்சு கலங்கிக் கண்ணீர்விட்டுத் தூரத்தே சென்று விடுகிறான்.)

கன்றை ஈனாத மலட்டு மாடுகள் வேலை செய்து வயோதிபமடைந்த மாடுகள் கன்றை ஈன்று

கிழப்பருவமடைந்த பசுக்கள் இளங்காளைகள் மெலிந்த கன்றுகள் நோய்வாய்ப் பட்டுக்கிடந்த மாடுகள் இப்படியாக முப்பதுக்கும் மேற்பட்ட மாடு கள் சேர்க்கப்பட்டன. இவற்றுள் இளங்கன்றை யுடைய ஒரு பசுவும் கன்றை நீக்கி விலைப்பட்டது. இறைச்சிக்காரர் ஒவ்வொரு மாட்டையும் நான்கு கால்களையும் சேர்த்துக் கட்டினர், வாகனத்துள் ஒன்றன்மேலொன்றாகத் தூக்கிப் போட்டனர். அடிப்பாகத்தில் அகப்பட்ட மாடுகள் மூச்சுவிட முடியாமல் திணறின. சிலவற்றின் தலைகள் வாகனத்தின் வெளியே தொங்கிக் கொண்டிருந்தன. அம்மா அம்மா என்று சில மாடுகள் கத்தின இப்படியாக இருபது மாடுகள் ஏற்றப்பட்டுவிட்டன. வாகனம் புறப்படுகின்றது.

ஏனைய மாடுகளை ஒன்றோடொன்றாகப் பிணைத்து விட்டு இவை நிற்கட்டும் சிறிது வேளையில் வந்து ஏற்றுகிறோம் என்று சொல்லி இறைச்சிக்காரர் புறப்பட்டுவிட்டார்கள்.

*****

பிணைக்கப்பட்ட மாடுகளுள் கன்றை விலக்கிய பசுவும் ஒன்றாக நின்றது. அந்தப் பசுவின் கன்று ஓடி வந்து தாயின் மடியில் பால் குடித்தது. அப்போது அந்தப்பசு இப்போது பால் குடிக்கிறாய் மகனே, பின்பு யாரிடம் பால் குடிப்பாய்

என்று கண்ணீர் விட்டது. ஏன் அம்மா அப்படிக் கூறுகிறீர்கள் என்றது கன்று.

மகனே எங்களை வளர்த்தவர்கள் இறைச்சிக்கடைக்காரருக்கு எம்மை விற்று விட்டார்கள். நானும் சிறிது நேரத்தில் இறைச்சிக் கடைக்குப் போகப் போகிறேன் என்று புலம்பத் தொடங்கியது........

## பாடல்

உருகிமனம் வேகுதடா என்னாசை மகனே எமக்கு
மரணகாலம் வந்ததடா என்னாசை மகனே
கருகிஉடல் நடுங்குதடா என்னாசை மகனே சொல்லக்
கண்ணீரே பெருகுதடா என்னாசை மகனே

சைவரென்று பேசிடுவார் என்னாசை மகனே இங்கே
சமயநெறி தவறிவிட்டார் என்னாசை மகனே
கையணைத்துப் பாலெடுத்தர் என்னாசை மகனே எம்மைக்
கடவுளென்று பொங்கலிட்டார் என்னாசை மகனே

ஆண்டுக்கொரு கன்றாகப் பெற்றெடுத்தேனே ! நித்தம்
அன்பாக மடி சுரந்து பால் கொடுத்தேனே
வேண்டுமட்டும்எங்கள்பட்டிபெருகச்செய்தேனே!வயல்
விளைபயிர்கள் செழுமைபெற எருவும் தந்தேனே.

ஆசையுடன் தயிர்நெய்மோர் உண்டுசுகித்தார்-இவை
அபிஷேகப் பொருளென்று மேன்மைபேசினார்
ஈசனேறும் வாகனமாய் மதிப்புத்தந்தாரே! சாணம்
எரிந்தநீறு பாவம்தீர்க்கும் என்றணிந்தாரே.

வேதமுடன் திருமுறைகள் எம்மைப்புகழும்- எல்லா
விண்ணவரும் எம்முடம்பில் வாழ்வதை யறியார்
ஓதுகின்ற தத்துவநூல் புராணங்களெல்லாம் - எங்கள்
உயர்நிலையைக் கூறுவதை உணரமாட்டாரே.

**இவற்றைக்கேட்ட பசுக்கன்று இடைமறித்துத் தாயைக் கேட்கிறது**

அம்மா தாயே கலங்காதே
ஆவின மாகிய எங்களின்மேல்
எவ்வா றாகத் தேவர்குலம்
இணைந்துள் ளார்கள் சொல்லம்மா.

**பசு சொல்லுகிறது**

என்றன் மகனே சொல்லக் கேள்
இறைவன் உமைக்குச் சொன்னமொழி
இன்றுன் செவியில் உரைக்கின்றேன்
எல்லா ருக்கும் இதைச் சொல்லு.

பசுவின் பெருமை தெரிந்தவர்கள்
இசைவுடன் எம்மை வளர்ப்பார்கள்
பசுவைக் கொன்று புசிப்பவர்கள்
வசைமிகு நரகில் உழல்வார்கள்

நமது பெருமை உணர்த்திடவே
நாரணன் கோகுலம் மேய்க்க வந்தான்
அமையும் சித்திர புத்திரனார்
ஆவின் வயிற்றில் வந்துதித்தார்.

*****

## பசுவின் அங்கலட்சணம்

பசுவின் நாற்கால் பங்கயன்; பாதம்
வசிப்பான் குபேரன்; வழங்குகா லிடையில்
தசவுரு நாரணன்; தண்ணுடல் மயிரில்
இசைதரும் இமையோர் எல்லாம் வாழ்வர்

தகைமிகு வாலில் தருமதே வதைகள்,
வகையருள் யோனியில் மகாலட் சுமியாம்,
அகமகிழ் மடியில் அமுதகூ பாளர்,
பகரடி வயிற்றில் பன்னகர் வசிப்பார்,

பெருவயிற் றினிலே பிறங்குவன் அக்கினி,
திருமலி முகப்பில் தேவிசா வித்திரி
பரவிடு நெஞ்சில் பகவனாம் தேவதை,
வரிமடிப் பினிலே வதிவாள் உமையவள்

கண்டத்தில் ஈசன், கவினுயர் தவடையில்
எண்டிசை வசுக்கள், இணைமுக வாய்க்கடை
தண்திங்கள் இரவி, தாங்கும் புட்டம்
முண்டக, சீவன்முத்தரும் உறைவார்

திலக நெற்றியில் சித்தர், மூக்கினில்
நலமுணர் வாயு, நற்கொம்பில் இயமன்
தலைஉயர் நெற்றியில் சப்த இருடிகள்
இலகும் முகத்தில் இந்திரன் இருப்பர்.

ஆனின் இரத்தம் அமுதசந் திரகலை
ஊனெலாம் சத்திகள் உணர்முலைக் காம்புகள்
தானநான் மறைகள் - சாணமும் சலமும்
ஞானலிங்கமும் - நதிகளு மாமே

இதைக்கேட்ட கன்று, அம்மா எங்கள் குலம் இவ்வளவு பெருமையுடையதென்று தெரிந்தும் சைவ மக்கள் சமயவிரோதிகளாகி, எங்களை உண்கிறார்களே எவ்வளவு அநியாயம் செய்கிறார்கள்....."அம்மா எங்கள் அப்பா, மனிதருக்குச் சேவை செய்யவில்லையா?"
பசு: மகனே எவ்வளவு உதவியாய் இருந்தார் உங்கள் அப்பா,

பாடல்

வேளாளர் கலப்பையிலே உனதுதந்தையார்
வியர்வை சிந்த உழுதுழுது விளைவுகொடுத்தார்
பாழான நிலமெல்லாம் பயிர்நில மாக்கிப்
பாடுபட்டுப் பணம் பெருகும் பயனுண் டாக்கினார்

வளர்ப்பவர்கள் சுகமாக வாழ்ந்து மகிழ்ந்திட
மனைக்குரிய பொருள்நிறைந்த வண்டியிழுத்தார்
களைப்புடனே ஓடுமரம் கல்லுமணலெலாம்
கடும்பாரம் நெடுந்தூரம் ஏற்றிப்பறித்தார்

காய்ச்ச லென்றால் காலலுத்தால் ஆறுதலில்லை
கழுத்திடையே புண்ணிருந்தால் ஆறுதலில்லை
நோய்ச்சுமையைக் காட்டாமல் மேற்சுமைகொண்டு
நுகமிழுத்தே உடலிளைத்தார் உன்தகப்பனார்

களைப்பாலே வாய்நுரைக்க மெல்லநடந்தால்
கம்படியும் கடிஉதையும் வம்பர் கொடுப்பார்
உழைப்பாலே குறைவென்றால் உணவும் குறைப்பார்
ஒன்றுக்குமிது உதவாதென் றடித்து விரட்டுவார்.

### கன்று விம்மிவிம்மி அழுதுகொண்டு சொல்கிறது

என்தாயே உன் மொழியை
இவ்வளவும் நான்கேட்டேன்
புன்புலால் ஆசையினால்
புரிந்தநன்றி மறந்தார்கள்
தெய்வத் துரோகிகளாய்ச்
சீரழிந்து போனார்கள்.
சைவமக்கள் வரிசைவிட்ட
சண்டாளர் ஆனார்கள்
எங்களைக் கொல்பவர்கள்
எழுநரகில் கிடப்பார்கள்
தங்கள் குலமழிந்து

தரித்திரத்தால் அலைவார்கள்
ஓங்கிவரும் காலன்கையில்
உழன்றுபுழு வாய்த் துடிப்பார்
ஏங்கிநாம் அழுதகண்ணீர்
எழுந்திடும்கூர் வாளாக
மனையிழந்து வளமிழந்து
வயிற்றுணவு கிடையாமல்
மனமழிந்து பித்தர்களாய்
வசைப்பட்டுத் திரிவார்கள்
இன்பாய் வளர்த்துவிட்டு
இறைச்சிக்கு விற்றவர்கள்
துன்பக் கடல் மூழ்கித்
துணையின்றித் தவிப்பார்கள்
அன்பாய் எமைவளர்த்தோர்
ஆனந்த மாய்வாழ்வர்
இன்பமக்கள் சுற்றமுடன்
இந்திரராய் வாழ்வார்கள்
கலைபெருகி தொழில்பெருகி
கற்பகமாய் வாழ்வார்கள்
நிலையான சுகமுடனே
நிறைவாக வாழ்வார்கள்
செல்லும் இடமெல்லாம்
சிறப்புடனே புகழ்படைத்துச்
சொல்லும்பல சித்திபெற்று
சுதந்தரமாய் வாழ்வாரே.

இப்படியாகப் பசுக்கன்று புலம்பும் வேளை, முன்பு மாடுகளை ஏற்றிச் சென்றவர்களில் ஒருவன் திடீரென ஓடி வந்தான். "நாங்கள் ஓட்டிச் சென்ற வாகனம் பெரிய பள்ளத்தில் புரண்டு, எமது முதலாளியின் ஒருகையும் ஒருகாலும் முறிந்து தலைமண்டையும் வெடித்து அறிவில்லாமல் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார் மற்றையமாடுகள் தேவையென்றால் பின்பு வருவோம் மாடுகளை அவிழ்த்துவிடுங்கள்" என்று கூறிவிட்டுத்திரும்பி ஓடினான். பசுவும் கன்றும் சந்தோஷமாக வளர்ந்தன. மாடு விற்றவர்கள் காலகதியில் வறுமையில் உணவின்றி உடையின்றி மனையின்றி அலைந்தார்கள். அக்கிராமத்து மக்கள் இறைச்சிக்கு மாடு விற்பதில்லை என்று திடசங்கற்பம் செய்தார்கள்.

பிள்ளையார் அச்சகம் நல்லூர்